மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, நிதி வசதி இருக்கின்ற ஆலயங்களிலிருந்து தற்பொழுது 11 சித்த வைத்திய மருத்துவ மனைகளை நடத்திக் கொண்டு வருகிறோம். வரும் ஆண்டுகளில் அதிகப்படியாக நடத்த ஏற்பாடுகளை அறநிலையத்துறை எடுத்துக்கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பது குறிக்கும்.]

2. 1971-72-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

கோரிக்கை எண் 12—காவல் துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, நிதிக் கோரிக்கையின் மீது விவாதம். பதின்மூன்றும் நாள். கோரிக்கை எண். 12—காவல் துறை.

மாண்புமிகு திரு. மு கருணாநிதி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

" நிதிக் கோரிக்கை எண். 12—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 18,91,04,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும் ".

திரு. எ. சுவாமிதாஸ் : போலீஸ் நிர்வாகத்தில் எல்லோருக்கும் சமநீதி கிடைக்க ஏற்பாடு செய்வதைப்பற்றி விவாதிக்க. I move the cut motion standing in my name, namely,

" That the allotment of Rs. 18,91,04,300 under Demand No. 12—Police—be reduced by Rs. 100 ".

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, காவல்துறை நிர்வாகத்தில் வெளியார் தலையிடுவதைத் தடுப்பதுபற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண். 12—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 18,91,04,300-இல் ரூ. 100 குறைக்க வேண்டும். " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE : Sir, to discuss the need for the issue of instructions to all the police stations to take impartial action irrespective of political considerations whenever complaints are brought to police stations, I move the cut motion standing in my name, namely,

" That the allotment of Rs. 18,91,04,300 under Demand No. 12—Police—be reduced by Rs. 100 ".